**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 5 / 2025**

**வா.சா.1 – அருண்ஏசுஅடியான்** **23.02.2026**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் வாதி வங்கி கிளையில் மே 2025ல் பணியில் சேர்ந்தேன். தாவா கடனை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2ம் பிரதிவாதி சபரிக்கண்ணன் மட்டும் கையொப்பம் செய்து விண்ணப்பம் அளித்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 விண்ணப்பம் அளித்த போது 2ம் பிரதிவாதி 12ம் வகுப்பு படித்து முடித்திருந்தார் என்றால் சரிதான். பொதுவாக 12ம் வகுப்பு படிப்பவர்களுக்கு 17 வயது இருக்கும் என்றால் 17 அல்லது 18 வயது இருக்கும். பொதுவாக கல்விக்கடன் கேட்கும் போது அவரது பிறந்த தேதி மற்றும் வயதை அறிந்து கொள்வதற்காக பிறப்புச் சான்று அல்லது கல்விச்சான்று வாங்கி பார்ப்போமா என்றால் பார்ப்போம். அதுபோல இந்த வழக்கில் 2ம் பிரதிவாதியின் வயது சம்மந்தமாக ஆவணங்களை பார்த்து தான் விண்ணப்பம் பெற்றிருப்பார்கள். வயது சம்மந்தமான ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் 2வது பக்கத்தில் எங்கள் வங்கி மேலாளர் கையொப்பம் செய்துள்ளார். கடன் பெறுபவர் என்பதில் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் கையொப்பம் செய்துள்ளார்கள் அதற்கு கீழே 1ம் பிரதிவாதி கையொப்பம் செய்து அதை அடித்துவிட்டு வேங்கை என்று பெயர் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 கடன் ஒப்பந்தத்திற்கு முத்திரை வில்லை ஒட்டப்படவில்லை என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 வங்கி கணக்கு பட்டியலில் 31.10.2022ல் கடன் நிலுவைத் தொகை எவ்வளவு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ரூ.6,07,342/– ஆகும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ஆவணத்தில் 31.10.2022 அன்று கடன் நிலுவைத் தொகை ரூ.5,80,187/– என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடன் பெற்றோரின் கடன் கணக்கு வராக்கடன் ஆன தேதியிலிருந்து வட்டி கணக்கீடு செய்யாமல் வா.சா.ஆ.4 கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. வட்டி கழிக்கப்பட்ட விபரம் வா.சா.ஆ.4 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை. ஏற்கனவே 2ம் பிரதிவாதியை வங்கிக்கு அழைத்து பேசி அந்த பேச்சுவார்த்தையின் அடிப்படையில் 2ம் பிரதிவாதி ஒரே தவணையில் கடந்த 19.08.2024 அன்று ரூ.1,08,785/– வாதி வங்கியில் செலுத்தியுள்ளார் என்றால் 2ம் பிரதிவாதி மேற்படி தொகையை வங்கியில் செலுத்தியுள்ளார் ஆனால் அது பேச்சுவார்த்தையின் அடிப்படையில் கட்டப்பட்டுள்ளதா என்று தெரியவில்லை. வா.சா.ஆ.5 ஆவணத்தில் 12.12.2023 அன்று மத்திய அரசு கல்விக்கடனுக்காக ரூ.3,26,355.19/– வங்கியில் வரவு வைத்துள்ளது என்றால் சரிதான். வாதி வங்கிக்கும் 2ம் பிரதிவாதிக்கும் நடந்த பேச்சுவார்த்தையின் அடிப்படையில் மத்திய அரசு மேற்படி தொகை ரூ.3,26,355.19/– செலுத்தியுள்ளது என்றும் அதன் பின்பு 2ம் பிரதிவாதி ரூ.1,08,785/– செலுத்தி கடன் முழுவதும் முடிக்கப்பட்டது என்றும் அதன் பின்னர் பணியில் சேர்ந்த எங்கள் அதிகாரி பின் யோசனை செய்து தவறாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் 2ம் பிரதிவாதியின் தகப்பனாரான 1ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் யார் யார் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்

சரிதான். 1ம் பிரதிவாதி இறந்த பின்பு வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள அவரது வாரிசுகளை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். கடன் வாங்கிய தேதியிலிருந்து 19.08.2024 வரை பிரதிவாதிகள் மேற்படி கடன் தொகைக்காக தொகை எதுவும் செலுத்தவில்லை என்றால் 07.06.2021 அன்று ரூ.22,679/- 22.10.2021 அன்று ரூ.38,491/- 19.03.2022 அன்று ரூ.46,087/- 01.04.2023 அன்று ரூ.51,550/- 19.08.2024 அன்று ரூ.1,08,785/- தொகை பிரதிவாதிகள் செலுத்தியுள்ளார்கள். மேற்படி தொகைகள் செலுத்திய விபரத்தை பிராதிலும் நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஒரு இளவரால் கொடுக்கப்பட்ட விண்ணப்பம் என்பதால் அந்த விண்ணப்பமே சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இளவரால் கொடுக்கப்பட்ட விண்ணப்பத்தின் பேரில் வங்கி வழங்கிய அனுமதி கடிதம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. போதுமான முத்திரை வில்லை இல்லாததால் வா.சா.ஆ.3 கடன் ஒப்பந்தம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தில் ரூ.5,80,187/- கோரி சட்டஅறிவிப்பு அனுப்பிவிட்டு அதற்கு விரோதமாக பிராதில் ரூ.1,45,046/- கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் வாதி வங்கிக்கு தெரிந்திருந்தும் அவர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காத தோசத்திற்கு உள்ளாகிறது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் இதர வாரிசுகளின் கடன் பொறுப்பை வாதி வங்கியே தட்டிக்கழித்துள்ளது சட்ட விரோதமானது என்றால் சரியல்ல. வா.சா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ள

விபரங்களை பிராதிலும் நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிடாததால் வாதி வங்கி சுத்தமான கரங்களுடன் நீதிமன்றத்தை அனுகவில்லை என்றும் உண்மைகளை மறைத்துள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. நாங்கள் குறிப்பிட்டுள்ள கடன் தொகையும் வட்டி விகிதமும் மத்திய ரிசர்வ் வங்கியின் விதிகளுக்கு முரணானது என்றால் சரியல்ல. ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தி மத்திய அரசு ஒரு பகுதி தொகையையும் 2ம் பிரதிவாதி மீதி தொகையும் செலுத்தி கடன் முடிக்கப்பட்டுவிட்டதால் வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் பிராதில் கோரியுள்ள தொகையை செலுத்தவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. 17.01.2018 அன்று கடன் வழங்கிவிட்டு அதனை திரும்ப பெறுவதற்கு 7 ஆண்டுகள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்தவழக்கு காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை